**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

செய்தி ஆசிரியர்,
அனைத்து செய்தி ஊடகங்கள்.

**ந.க.எண். 020625/பி1/2020** **நாள்:11.09.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – செப்டம்பர் 2020 பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு – தனித்தேர்வர்கள் – தேர்வுக்கூட நுழைவுச்சீட்டை பதிவிறக்கம் செய்தல் குறித்த பத்திரிக்கைச் செய்தி வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

******

21.09.2020 அன்று தொடங்கி நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு துணைத்தேர்வினை எழுதவுள்ள தனித் தேர்வர்கள் தங்களின் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டை பதிவிறக்கம் செய்தல் குறித்த **“செய்திக்குறிப்பு”** இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பொதுமக்களும், தேர்வர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடவும், வானொலி/தொலைக்காட்சியில் ஒலி/ஒளி பரப்பிடவும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

‘‘இது விளம்பரம் அல்ல’’எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**<u>இணைப்பு:</u>** செய்திக் குறிப்பு

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
   – தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும்

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.**
**பத்தாம் வகுப்பு துணைத்தேர்வு செப்டம்பர் 2020**
**தனித் தேர்வர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகளை இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளுதல்**
**செய்திக்குறிப்பு**

21.09.2020 முதல் 26.09.2020 வரை நடைபெறவுள்ள 2020 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வெழுத விண்ணப்பித்த அனைத்து தனித்தேர்வர்களும் (தட்கல் உட்பட) மற்றும் மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு விண்ணப்பித்திருந்த தனித்தேர்வர்களும் **15.09.2020 பிற்பகல் முதல் www.dge.tn.gov.in** என்ற இணையதளம் வழியாக தேர்வுக் கூட அனுமதிச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**www.dge.tn.gov.in** என்ற இணையதளத்திற்குச் சென்று **SSLC SEP 2020 EXAMINATION – HALL TICKET DOWNLOAD**" என்ற வாசகத்தினை **"Click"** செய்ய வேண்டும். தோன்றும் பக்கத்தில், மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் மற்றும் செப்டம்பர் 2020 துணைத் தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் தங்களது விண்ணப்ப எண்/நிரந்தர பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் (Date of Birth) பதிவு செய்து தேர்வுக் கூட அனுமதிச் சீட்டினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், விண்ணப்ப எண்ணை தவறவிட்டவர்கள் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தினை தொடர்பு கொண்டு தங்களது தேர்வுக்கூட அனுமதி சீட்டினை பெற்றுக் கொள்ளலாம்.

மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு தனித்தேர்வராக விண்ணப்பித்து அறிவியல்பாட செய்முறைத் தேர்வுக்கு வருகைபுரியாதோர் மற்றும் அறிவியல் பாடத்தில், செய்முறைத் தேர்வில் 25 மதிப்பெண்களில் தேர்ச்சிக்கான குறைந்தபட்ச மதிப்பெண் 15க்கு குறைவாக பெற்று தேர்ச்சி அடையாதவர்கள் ஆகியோர் நடைபெறவுள்ள செப்டம்பர் 2020 துணைத்தேர்வின் போது அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் பங்கேற்க வேண்டும். அறிவியல் பாடத்தில் கருத்தியல், செய்முறை என எதாவது ஒரு பகுதியில் தேர்ச்சி பெறவில்லையெனில், தேர்ச்சி பெறாத பகுதியில் மட்டும் தேர்வர்கள் தேர்வெழுதலாம் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

..2..

செய்முறைத் தேர்வெழுத வேண்டிய தனித்தேர்வர்களுக்குத் தேர்வுக்கூட அனுமதி சீட்டில் அறிவிக்கப்பட்ட தேர்வு மையத்திலேயே **17.09.2020 மற்றும் 18.09.2020** ஆகிய இரு நாட்களில் செய்முறைத் தேர்வு நடத்தப்படும். எனவே, இத்தேர்வர்கள் உரிய தேர்வு மைய தலைமையாசிரியரை மேற்படி நாட்களில் அவசியம் அணுகுமாறு கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

உரிய தேர்வுக் கூட அனுமதிச் சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**சென்னை – 600 006**
**நாள்: 11 .09. 2020**